දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

| | | |
|---|---|---|
| අමාත්‍ය / அமைச்சர் / Minister | } | 2784832<br>2784807<br>2785617 |
| ලේකම් / செயலாளர் / Secretary | } | 2784812 |
| කාර්යාලය / அலுவலகம் / Office | } | 2785141-50<br>Fax: 2784846 |

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................................

අධ්‍යාපන අමාත්‍ය

கல்வி அமைச்சு

**Ministry of Education**

"ඉසුරුපාය", ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ

බත්තරමුල්ල

"இசுருபாய" ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை

பத்தரமுல்லை

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte

Battaramulla.

.... பிரிவெனாக்கள் தனியார் பாடசாலைக் கிளை

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/12/01/03/34(ii)

දිනය / திகதி / Date } 2009 .09. 02

சுற்று நிருப இலக்கம் : **2007/04(i)**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

சகல அதிபர்கள்,

சகல பிரிவெனாதிபதிகள் ஆகியோருக்கு.

<u>தரம் 5 புலமைப்பரிசில் பெறுநர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கல்</u>

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2006.06.20ஆம் திகதிய 2006/27ஆம் இலக்க சுற்றுநிருபத்திலும் 2007.02.28ஆம் திகதிய 2007/04 ஆம் இலக்கச் சுற்று நிருபத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களும் இணைக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத்தருகிறேன்.

2. "சாதாரண வாழ்க்கையில் இருக்கும்போது புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் ஒருவர் பின்னர் மதபோதகர் வாழ்க்கையில் நுழைந்தாலும் அவருக்குத் தொடர்ச்சியாகப் புலமைப்பரிசில் கொடுப்பனவு பெறுவதற்குத் தகுதியுண்டு. எனினும் அவ்வாறு புலமைப்பரிசில் வழங்குகையில் புலமைப்பரிசில் பெறுவதற்குக் கருத்திற் கொள்ளப்படுகின்ற வருடாந்த வருமான மட்டமானது, அவரின் சாதாரண வாழ்க்கையில் இருந்த போது பெற்றோர் பாதுகாவலரின் வருடாந்த வருமான மட்டம் அல்லாது மதபோதகர் வாழ்க்கையின் போதான பாதுகாவலரின் வருடாந்த வருமான மட்டமாகும்". அதற்கு இணங்கச் செயற்பட்டு உமது மாகாணத்தில் பாடசாலை ஒன்றில், பிரிவெனா ஒன்றில் கல்வி கற்கின்ற புலமைப்பரிசிலுக்கு உரித்தான மதபோதக மாணவர் ஒருவருக்குப் புலமைப்பரிசில் பெறுவதற்குத் தகுதி உண்டு.

3. அதற்கேற்ப உங்களது வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற புலமைப்பரிசில் உரித்துடைய சாதாரண மாணவர் ஒருவர் மதபோதகர் வாழ்க்கைக்கு இணைந்தால் அம்மாணவருக்கும் புலமைப்பரிசில் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எம்.எம்.என்.டீ.பண்டார

செயலாளர்

கல்வி அமைச்சு

பிரதிகள்:-

1. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் - புலமைப்பரிசில் நிதியை உரியவாறு கொடுப்பனவிற்காக
2. சகல வலயக் கணக்காளர்கள் - புலமைப் பரிசில் கொடுப்பனவை முறையாகச் செலுத்துதல் மற்றும் தாமதங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்
3. உரிய வங்கி முகாமையாளர்கள் - உரிய சிறுவர் கணக்குகளை ஆரம்பிக்க மற்றும் உரிய கொடுப்பனவுகளுக்காக
4. கணக்காளர் - தகவலுக்காக
5. கணக்காளர் - உள்ளகக் கணக்காய்வு – தகவலுக்காக
6. கணக்காளர் - தகவலுக்காக